P.R.NO: 43.

நாள்: 17.05.2017

செய்தி.

**இந்திய விமானப்படைக்கான ஆட்சேர்ப்பு முகாம் - மே 20 மற்றும் மே 24 தேதி வரை திருச்சிராப்பள்ளியில் நடைபெறவுள்ளது.**

இந்திய விமானப்படையில் பணிபுரிய துடிப்பும், துணிவும், ஆர்வமும் உள்ள திருமணமாகாத ஆண்கள் குரூப் ஒய் (தொழில்நுட்பமல்லாதது) பிரிவில் சேர வருகின்ற மே 20 முதல் மே 24 ஆம் தேதி வரை திருச்சிராப்பள்ளியில் உள்ள அண்ணா ஸ்டேடியத்தில் காலை ஆறு மணி முதல் ஆட்சேர்ப்பு நடைபெற உள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்களுக்கான குரூப் ஒய் பிரிவிற்கு மே 20 ஆம் தேதி காலை ஆறு மணி முதல் பத்து மணிக்குள் வருபவர்களுக்கு மட்டுமே எழுத்துத் தேர்வு மற்றும் தகுதித்தேர்வு 1-ம் நடைபெற உள்ளது. மே 20 ஆம் தேதி நடைபெறும் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு மே 21 ஆம் தேதி உடற்திறன் தேர்வு மற்றும் தகுதித்தேர்வு – 2-ம் நடைபெற உள்ளது.

**கல்வித்தகுதி:-** குரூப் ஒய் (Automobile Technician, GTI மற்றும் IAF (Police)) தொழிற் பிரிவிற்கு ப்ளஸ் - 2 வில் மத்திய மற்றும் மாநில அரசாங்களால் அங்கிகரிக்கப்பட்ட பாடங்களுடன் படித்து குறைந்த பட்சம் 50% மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சியடைந்திருத்தல் வேண்டும்.

குரூப் ஒய் பிரிவில் சேர 07.07.1997 மற்றும் 20.12.2000-க்கும் இடைப்பட்ட காலத்தில் பிறந்தவர்கள் (இரு நாட்களும் சேர்த்து) விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் ஆவர்.

மேற்கண்ட தகுதியும் விருப்பமும் உள்ள திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள், எழுதுபொருள், கடவுச்சீட்டு அளவிலான ஏப்ரல் 2017 க்குப்பின் (மார்புக்கு முன்னாள்) கரும்பலகையில் பெயர் மற்றும் தேதி சரியாக குறிப்பிட்டு எடுக்கப்பட்ட ஏழு கலர் புகைப்படங்கள், அனைத்து அசல் மற்றும் நான்கு ஒளிநகல் கல்விச்சான்றுகள், மதிப்பெண் பட்டியல், அசல் இருப்பிடச்சான்று, NCC சான்று (இருப்பின்) ஆகியவற்றுடன் மே 20 ஆம் தேதி காலை ஆறு மணிக்கு திருச்சிராப்பள்ளியில் உள்ள அண்ணா ஸ்டேடியத்திற்குச் சென்று ஆட்சேர்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறும், இடைத்தரகர்களை நம்பி ஏமார வேண்டாம் எனவும், தங்களது தகுதியை மட்டுமே நம்பி தேர்வுக்குச் செல்லுமாறும், மேற்கொண்டு விவரங்கட்கு 044-22390561 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டும், திருநெல்வேலியில் உள்ள முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தை அணுகிப் பயனடையுமாறும் மாவட்ட ஆட்சியர் முனைவர் மு.கருணாகரன், இ.ஆ.ப., அவர்கள் தமது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு.
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்
திருநெல்வேலி

மாவட்ட ஆட்சியர்,
திருநெல்வேலி.